

திருத்தணி நகராட்சி பகுதியில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., தொடங்கி வைத்து குடும்ப அட்டை, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, பட்டா மாற்றம், என 46 அரசு சேவைகளுக்கு மனு வைத்த பொதுமக்களுக்கு உடனடியாக குடும்ப அட்டை உள்ளிட்டவை வழங்கினார். உடன் நகர செயலாளர் திருத்தணி வி.வினோத்குமார், அதிகாரிகள் நகர துணைச் செயலாளர் ஜி.எஸ்.கணேசன், கே.எஸ்.அசோக்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் அரசு துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வார்டு151, போரூர், ஆற்காடு சாலை, கிருஷ்ணவேணி கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின் முகாமை காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ., ஆய்வு மேற்கொண்டார். உடன் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், , எஸ். அருணாசலம், வே.மதியழகன், இரா.பால்பாண்டியன், கே.ராஜி, எம்.சி., அ.மோசஸ், சி.சுந்தர், ஆ. செல்வம், ச.சங்கர்கணேஷ், ஹேமலதா கணபதி, சாந்தி ராமலிங்கம், .விஜயன், ஆர். சேகர், இரா. ராஜேந்திரன், கோ.இராமலிங்கம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



### அகில இந்தியாவிலே கொள்கை ரீதியாக -

# அமைப்பு ரீதியாக இருக்கும் ஒரே கட்சி தி.மு.கழகம் தான்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேச்சு!

திருவள்ளூர், ஆக. 01-

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம் பூவிருந்தவல்லியில் நடைபெற்றது. இதில் மாவட்ட அவைத் தலைவர் ம.ராஜி தலைமை வகித்தார்.

பூவிருந்தவல்லி நகரச் செயலாளர் ஜி.ஆர்.திருமலை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் வரவேற்புரையாற்றினார்கள்.

பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினரும் மாநில ஆதிதிராவிட நல குழு அணி செயலாளருமான ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள் பிரபு கஜேந்திரன், ப.அப்துல் மாலிக், மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு இணை செயலாளர் சி.ஜெரால்டு, தொகுதி பார்வையாளர்கள் பி.டி.சி.செல்வராஜ், நிவேதா ஜெசிகா மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் வி. ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார், பொதுக் குழு உறுப்பினர்கள் ஜி. ராஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், எஸ். சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இக் கூட்டத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகள் வழங்கினார்.

அப்போது பேசிய அவர், திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதி பாக இளைஞர்கள் பயிற்சி சமூக வலைத்தளம் கூட்டம் நடைபெற உள்ளது. இதில் திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட தொகுதி தொகுதி வாரியாக மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக இளைஞர்கள் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட வார்டு மற்றும் கிளை கழகங்களில் புதிதாக இளைஞர் அணி பொறுப்புக்கான நிர்வாகிகளை உடனடியாக தேர்வு செய்து மாவட்ட கழகத்திற்கு அனுப்ப வேண்டும். குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆர்வம் உள்ள இளைஞர்களை நியமிக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு காலகட்டத்தில் தி. மு.க.விற்கு பிரச்சினை ஏற்பட்ட போது அப்போது இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நீதிமன்றத்தின் மூலமாகவும் தேர்தல் ஆணையத்தின் மூலமாகவும் வழக்கு போடப்பட்டு அப்போது விசாரணை மேற்கொள்ளப்பட்டது.



அப்போது தேர்தல் ஆணையராக இருந்த டி.என். சேஷன் அவர்கள் தீர்ப்பு வழங்கினார். அதில் அகில உலக கட்சிகளில், அகில இந்திய கட்சிகளில், மாநில கட்சிகளில் பைலாவை ஆய்வு மேற்கொண்டு நன்றாக அறிந்து புரிந்து உள்ளேன். அப்படி பார்க்கும் பட்சத்தில் திராவிட முன்னேற்ற கழகம் 1949 ஆண்டு முதல் இன்று வரை அமைப்பு ரீதியாகவும், ஜனநாயக ரீதியாகவும் இருக்கும் ஒரே கட்சி இந்தியாவில் எது என்றால் திராவிட முன்னேற்றக் கழகம் தான். அதுவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையிலான திமுக தான் என்று தேர்தல் ஆணையர் சேஷன் அவர்கள் கொள்கை ரீதியான எதிரியாக இருந்தாலும் சரியான தீர்ப்பு வழங்கினார்.

இப்படிப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக கட்சியில் இளைஞர்கள் ஆகிய நீங்கள் வீத வீதியாக பணியாற்றினால் சரியான நேரத்தில் உங்களுக்கு பொறுப்புகள் தேடி வரும். குறிப்பாக திராவிட முன்னேற்ற கழகத்தில் உள்ள அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளு மன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக செயலாளர், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளில் உள்ளார்கள் என்று அவர் தெரிவித்தார்.

இதில் ஆவடி மேயர் ஜி.உதயகுமார், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் சன் பிரகாஷ், டி. தேசிங்கு, ப.ச.கமலேஷ், சே.பிரேம் ஆனந்த், என்.இ.கே.மூர்த்தி, தி.வை. ரவி, பேபிசேகர், பொன். விஜயன், ஜி.நாராயண பிரசாத், தங்கம் முரளி, டி.முரளி கிருஷ்ணன், தி.வே.முனுசாமி,

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி. சி.கருணாநிதி, வி.ஜெ.உமா மகேஸ்வரன், அக்னிராஜேஷ், ஏ.டி.பிரியாகுமார், சதீஷ்குமார்,

மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் க.ஸ்ரீதர், பெ. வினோத், ஆர்.பிரவீன்குமார், வி.தியாகராஜன், விமல் ஆனந்த்,

மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஜி.சதீஷ்குமார், மகா புவனேஷ், ரங்கநாதன்மகேஷ், க.பரிமலேழன், ஆர்.பிரவீன்குமார், லோ.யுவராஜ், டென்னீஸ்ராஜ், ஜோ.தினேஷ், ஹ.கார்த்திக், தி.சதீஷ், ரா.ராஜ், சஞ்சய் திருமலை, என்.சரத்குமார், பா.அப்பு(எ) ஜெபராஜ், சு.கங்காதரன், மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழக இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டம் முடிவில் நகர இளைஞர் அணி அமைப்பாளர் அ.முகமது ராஷிக் ஹனீப் நன்றி கூறினார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 162 வது நாள்!

## திரு.வி.க.நகர் பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!



சென்னை, ஆக. 1-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 162 ஆம் நாளான - கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (31.7.2025) திரு.வி.க நகர் தெற்கு பகுதி: 1) வட்டம் 73, பழைய வாழை மாநகர் சாலை, பழைய தபால் நிலையம் எதிரில், ஓட்டேரி. 2) வட்டம் 75 அ, சின்ன பாபு தெரு, 5 விளக்கு அருகில், நம்மாழ்வார் பேட்டை, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, எம்.சாமி கண்ணு, இசட்.ஆசாத், பி.ஜெ. துளசிங்கம், இரா. வீரமணி, நா.துலுக்காணம், எம். பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, எஸ்.தமிழ் செல்வி, எஸ்.சசிகுமார், பா.பி.தாஸ், டி. சுரேஷ்குமார் (எ) பொல்லு சுரேஷ், எம்.தமிம், எஸ். வெங்கடேசன், வி.க.வெங்கடேசன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர். R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி ,

# 151 -வது வார்டில் 'உங்களுடன் ஸ்டாலின் முகாம்'

## பகுதிச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ., ஆய்வு!

சென்னை, ஆக. 1 -

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, சென்னை மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்11, வார்டு151, போரூர், ஆற்காடு சாலை, கிருஷ்ணவேணி கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாம் நேற்று 31.07.2025 மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, எம். எல்.ஏ., அவர்கள் கலந்து கொண்டு பார்வையிட்டு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் உள்ளிட்ட பொது மக்களின் பல்வேறு கோரிக்கைகளுக்கு தீர்வு காணும் வகையில் சம்மந்தப்பட்ட துறையினரிடம் உரிய முறையில் பரிசீலனை செய்து சேவைகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

இந்நிகழ்வில் மண்டலம்11, மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், எம்.சி., தலைமை செயற் குழு உறுப்பினர் எஸ்.அருணாசலம், பகுதி கழக நிர்வாகிகள் வே.மதியழகன், இரா.பால்பாண்டியன், கே.ராஜி, எம். சி., வட்ட கழக செயலாளர்கள் அ.மோசஸ், சி.சுந்தர், ஆ.செல்வம், மாமன்ற உறுப்பினர்கள் ச.சங்கர்கணேஷ், எம்.சி., ஹேமலதா கணபதி.எம்.சி., சாந்தி ராமலிங்கம், எம்.சி., மாவட்ட பிரதிநிதிகள் வி.விஜயன், ஆர்.சேகர்,இரா. ராஜேந்திரன், கோ.இராமலிங்கம் மற்றும் கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# தாம்பரம் மாநகர தி.மு.க.பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., அழைப்பு



தாம்பரம் மாநகர தி.மு.க.பொது உறுப்பினர்கள் கூட்டம் (04.08.2025 திங்கட்கிழமை) மாலை 04.00 மணிக்கு, மேற்கு தாம்பரம், முடிச்சூர் ரோட்டில் அமைந்துள்ளகோன் கிருஷ்ணா திருமணமண்டபத்தில் மாநகர கழக அவைத் தலைவர், துணை மேயர் கோ.காமராஜ் தலைமையில், மேயர் க.வசந்தகுமாரி, இரா.நரேஷ் கண்ணா, பொ.சதாசிவம், வ. விஜயரங்கன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறஉள்ளது.

இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர், மண்டலக்குழுத் தலைவர்கள், தலைமைச் செயற்குழு, பொது குழு உறுப்பினர்கள், மாவட்டபிரதிநிதிகள், மாநகர, பகுதி, வட்டகழகச் செயலாளர்கள் / நிர்வாகிகள், மாமன்றஉறுப்பினர்கள்,மாநகரத்திற்குட்பட்ட மாவட்ட, மாநகர, பகுதி, இளைஞரணி, மாணவரணி, மகளிரணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் தவறாது கலந்து கொண்டு கூட்டத்தினை சிறப்பித்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்.**109.08.2025 சனிக்கிழமை அன்று அரசு மருத்துவமனை திறந்து வைக்க மாநகரத்திற்கு கழகத் தலைவர் அவர்கள் வருகை குறித்தும்

2.ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை குறித்தும்

3.07.08.2025 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவுநாள் குறித்தும்

4,கழகவளர்ச்சி பணிகள் குறித்தும்

**எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ.**
செயலாளர், தாம்பரம் மாநகர தி.மு.க.

### புழல் எம்.நாராயணன் தலைமை! ஆர்.டி.மதன்குமார் முன்னிலை! ர.விஜய் ஆனந்த் ஏற்பாடு!

# மாதவரம் வடக்கு பகுதி திமுக இளைஞரணி சார்பில் தெருமுனைக் கூட்டம்!

## தக்கோலம் தேவபாலன் - செ.ஜோதி சிறப்புரையாற்றினர்!

சென்னை, ஆக.1-

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ, அவர்களின் ஆலோசனை படி சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக இளைஞரணி சார்பில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா நலத்திட்ட உதவிகள் மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் 28.07.2025 அன்று 17வது வட்டம் தீயம்பாக்கம் பேருந்து நிலையம் அருகில் மாதவரம் வடக்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ர.விஜய் ஆனந்த் ஏற்பாட்டில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் தலைமையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் 17வது வட்டச் செயலாளர் கே.கருணாகரன் வரவேற்றார். தலைமை கழக பேச்சாளர் தக்கோலம் தேவபாலன், இளம் பேச்சாளர் செ.ஜோதி ஆகியோர் நான்காண்டு திராவிட மாடல் அரசு சாதனையை விளக்கி உரையாற்றினர்.

நிகழ்வில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் சி.எஸ்.எஸ்.டி.சீனிவாசன், கேபிள் த.வேல் கணேசன், ஜி.கே.இனியன், 16வது வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன்,19வது வட்ட செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன், 23 அ வட்ட செயலாளர் வி.ஆர். குப்பன்,மாவட்ட பிரதிநிதி பா.சந்திரன், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எம்.என்.அஜய் தெனனவன், ஏ.விஜயன், ஜி.ராஜேஷ் கண்ணன், வி.சிவப்பிரகாஷ், டோமினிக் பிரான்சிஸ், சதீஸ்(எ)சாந்தகுமார், கே,யுவராஜ்,

மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் அம்மு மூர்த்தி, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ்.உதயகுமார், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே.சண்முகப்பிரியன், வக்கீல் வெங்கடேசன், பகுதி மகளிர் அணி அமைப்பாளர் சுகாசினி, துணை அமைப்பாளர்கள் அத்திக்குளம் தேவி, சரஸ்வதி பெரியநாயகி, கஸ்தூரி, வைலட்ராணி,மேச்சி,இலா, உதயகுமார்,துளசி, காவாங்கரை ஹரி, சடையாங்குப்பம் வெங்கடேசன், வக்கீல் சுரேந்தர், பர்மா நகர் சரவணன், மணலி புதுநகர் செமின் எடிசன், நித்யா, ப்குமார், மகாலட்சுமி, துளசி, கலைச்செல்வி, தமிழ்ச்செல்வி, செல்லப்பா, யுவராஜ், சுனில், இளைஞர் அணி அமைப்பாளர்கள் மாதவரம் வினோத், மணலி ஸ்டாலின், துணை அமைப்பாளர்கள் எம்.எஸ். மணிகண்டன், குறளரசன், மகேந்திரன், மணிமாறன், சதீஷ்குமார், ரூபேஷ், 17வது வட்ட நிர்வாகிகள் சீ. பாலாஜி, சி.மூர்த்தி, காந்திநகர் டி.சுந்தரம், ஜான்சன், பூபாலன், சுதர்சன், டாக்டர் எம்.மைக்கேல், பி.செந்தில்,இ.கார்த்திக், எம்.என். தளபதி, சென்றம்பாக்கம் திராவிட ராமு, காந்திநகர் வாசு, பெரியார் நகர் விஜய், தீயம்பாக்கம் எஸ் ஜோசப், மற்றும் கழக உடன்பிறப்புகள் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா நலத்திட்ட உதவிகள் மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் 17வது வட்டம் தீயம்பாக்கம் பேருந்து நிலையம் அருகில் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ர.விஜய் ஆனந்த் ஏற்பாட்டில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் முன்னிலையில் நடைபெற்றது. இதில் வட்டச் செயலாளர் கே.கருணாகரன் வரவேற்றார். தலைமை கழக பேச்சாளர் தக்கோலம் தேவபாலன், இளம் பேச்சாளர் செ.ஜோதி ஆகியோர் நான்காண்டு திராவிட மாடல் அரசு சாதனையை விளக்கி உரையாற்றினர். இதில் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### தாம்பரம் 49-வது வார்டில் மண்டலக் குழுத் தலைவர் டி.காமராஜ் ஆய்வு!

தாம்பரம், ஆக. 1 -

தாம்பரம் மாநகராட்சி மண்டலம், 4, 49, வார்டு அப்துல் ராசக் தெரு மற்றும் மார்க்கெட் பகுதியில் உள்ள மீன் மற்றும் இறைச்சி இறைச்சி கடைகளில் தேங்கியுள்ள கழிவு நீர்களை அப்புறப்படுத்த 4,வது மண்டல குழு தலைவர் டி. காமராஜ் ஆய்வு மேற்கொண்டு ஒப்பந்ததாரர்களிடம் கழிவு நீர் கால்வாய்களை உடனடியாக அமைத்திட அறிவுறுத்தினார் அதுபோது மாமன்ற உறுப்பினர் சி சுரேஷ் ,மாநகர மீனவரணி அமைப்பாளர் டி.கே.தாமஸ் மற்றும் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் வி தங்கதுரை ஆகியோர் உடன் இருந்தனர்



தாம்பரம் மாநகராட்சி மண்டலம்,4., 49,வார்டு அப்துல் ராசக் தெரு மற்றும் மார்க்கெட் பகுதியில் உள்ள மீன் மற்றும் இறைச்சி கடைகளில் தேங்கியுள்ள கழிவு நீர்களை அப்புறப்படுத்த 4,வது மண்டல குழு தலைவர் டி.காமராஜ் ஆய்வு மேற்கொண்டு ஒப்பந்ததாரர்களிடம் கழிவு நீர் கால்வாய்களை உடனடியாக அமைத்திட அறிவுறுத்தினார். உடன் மாமன்ற உறுப்பினர் சி சுரேஷ் ,மாநகர மீனவரணி அமைப்பாளர் டி.கே.தாமஸ், உதவி செயற்பொறியாளர் வி. தங்கதுரை ஆகியோர் உடன் உள்ளனர்.